Registered as a Newspaper

University of Jaffna Sri Lanka
Medical Library
Faculty of Medicine


# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 21 வியாழக்கிழமை (04-03 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 97


# கிளாலியில் புலிகள் அதிரடி
# கடற்படை அதிகாரி மரணம்

## செவ்வாய் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஸ்ரீலங்கா கடற்படையினரின் படகு ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் கடற்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

தாக்குதலுக்கு இலக்கான கடற்படைப் படகில் இருந்து புகை வெளியேறிக் கொண்டிருந்ததாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்ற அதிரடித் தாக்குதலை அடுத்து கடலில் கடும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலி வீரச்சாவு

கிளாலிக் கடற் பரப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது கடற்புலி கப்டன் வேந்தன் (ஐயம பெருமாள் சத்தியசீலன்—உடப்பு, புத்தளம்) வீரச்சாவடைந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (உ)

## 2 கப்பல்களிலிருந்து நேற்று பொருள்கள் இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 4

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று ஒரே நேரத்தில் இரு கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டன.

ஏற்கனவே பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த ''மெரினால்'' கப்பலில் இருந்து அரிசியும்—

திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''குமாரி'' கப்பலில் இருந்து மாவும் நேற்று ஒரே நேரத்தில் இறக்கப்பட்டன.

ஆயிரத்து 300 மெற்றிக் தொன் அரிசியுடன் வந்த ''மெரினால்'' கப்பலில் இருந்து ஒரு தொகுதி அரிசி பருத்தித்துறையில் இறக்கப்பட்டதாகவும் —

மிகுதி அரிசி இன்று முதல் காங்கேசன்துறையில் இறக்கப்படும் என்றும் தெரியவந்தது (உ-3)

## நாளை வரும் குமணவில் 220 தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நாளை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் ''குமண'' கப்பலில் இரண்டாயிரம் மெற்றிக் தொன் அரிசி உட்பட மற்றும் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது.

நேற்று கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்பட்ட இக்கப்பலில் 220 தபால் பொதிகளும் —

450 மெற்றிக் தொன் மா, 200 மெற்றிக் தொன் சீனி, 100 மெற்றிக் தொன் பால்மா வகைகள், 50 மெற்றிக் தொன் பருப்பு, 20 மெற்றிக் தொன் சவர்க்காரம் ஆகியனவும் —

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருந்து வகைகளும் —

மற்றும் தொண்டர் நிறுவனங்கள், யாழ் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்குரிய பொருள்களும் எடுத்து வரப்படுவதாகத் தகவல் கிடைத்தது

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இக் கப்பலில் நாளை பருத்தித்துறைக்கு வந்துசேருவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. [உ-3]

## பொது முன்னணியாகப் பதிய ஐந்து எதிர்க்கட்சிகள் முடிவு

கொழும்பு, மார்ச் 4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட ஐந்து எதிர்க்கட்சிகள் நேற்று ஒன்று கூடி, பொது முன்னணியாகத் தம்மை தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கின்றன.

ஸ்ரீ. ல. சு. க, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் வை.பி.டி, சில்வா பிரிவு, தேசிய விடுதலை மக்கள் முன்னணி ஆகிய ஐந்துமே இக் கட்சிகளாகும்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை ஒட்டியே இந்த முன்னணி அமைக்கப்பட்டிருப்பதாகவும்—

மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றுவதில்லை என ம. ஐ. மு. கொள்கை அளவில் முடிவு செய்திருப்பதால் இக் கூட்டணியிலும் இடம்பெறவில்லை என்றும்—

எனினும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல்போன்றவற்றின் போது அக்கட்சியும் இக்கூட்டணியில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் நேற்று நடைபெற்றது. (உ-6)

## நாவாந்துறை, அரியாலையில் நேற்று விமானக் குண்டுவீச்சு

### சிறுமி பலி; வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நாவாந்துறை, அரியாலைப் பகுதிகள் மீது ஸ்ரீலங்கா விமானப்படை பொம்மர்கள் நேற்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின

இத் தாக்குதல்களின் போது 14 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்; நான்கு வீடுகள் சேதமடைந்தன.

நாவாந்துறையில்

நேற்றுக் காலை 9 மணியளவில் அவ்ரோ விமானம் சகிதம் யாழ்ப்பாணப்பகுதியை வட்டமிட்ட ஸ்ரீலங்கா விமானப் படையின் இரண்டு பொம்மர்கள் நாவாந்துறை வசந்தபுரம் பகுதியில் — கடற்கரையோரமாக — இரண்டு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. ஒவ்வொரு தடவையும் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் ஒன்று வெடிக்காத நிலையில் கடலில் காணப்பட்டது.

குண்டு வீசப்பட்ட பகுதியில் பெரும் கட்டடங்கள், தடுப்புகள், மரங்கள் இல்லாததால் குண்டுச் சிதறல்கள் நீண்ட தூரத்துக்கு பரவலாகப் பறந்தன.

குண்டு வெடித்த இடத்துக்குச் சுமார் 150 யார் தொலைவில் தனது வீட்டுக்கு அருகில் மரம் ஒன்றின்கீழ் நின்ற பாக்கியநாதன் வனிதா மாககிரட் [வயது 14] என்ற சிறுமி குண்டுச்சிதறல் தலையில் பட்டு படுகாயமடைந்தார். யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பல இடங்களையும் நேற்று ஹெலி, பொம்மர் நோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நேற்றுக் காலை நாவாந்துறை, அரியாலைப் பகுதிகளில் விமானக் குண்டு வீச்சு நடந்த அதேசமயம் குடாநாட்டில் பரவலாக பல இடங்களையும் பொம்மர்களும் ஹெலிகளும் நோட்டமிட்டுச் சென்றன.

காலை 9 15 மணிக்கும் 10. 30 மணிக்கும் இடையில் வலிகாமம் வடக்கில் அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளையும், சாவகச்சேரிப் பகுதியையும், ஆவரங்காலை அண்டிய பிரதேசங்களையும் பொம்மர்கள், ஹெலிகள் நோட்டமிட்டுச் சென்றதாக அவ்வப்பகுதி செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

(உ-5-15-45-117-155)

## அரை மாதமாக மறியல் போர்

நவாலி, மார்ச் 4

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்றுடன் பதினைந்து நாட்கள் தொடர்ந்து மறியல் போராட்டம் நடந்தது.

பண்டத்தரிப்பு பிரான்பற்றுக் கிராமத்தைச் சேர்ந்த ஏழாம் வட்டார மக்கள்— 510 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் — தமக்கு நிவாரணம் வழங்கக்கோரி, கடந்த மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தங்களுக்கு 7ஆம் கட்டத்துடன் நிறுத்தப்பட்ட நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பதே மறியல் போராட்டம் நடத்துவோரின் கோரிக்கையாகும்.

[அ-100]

## வெள்ளவத்தை கடிதங்களுக்கும் அதே கதி!

கொழும்பு, மார்ச் 4

வெளிநாடுகளில் இருந்து வடபகுதிக்கு வரும் கடிதங்கள் உடைக்கப்படுவது போன்று, கொழும்பில் வெள்ளவத்தை, தெகிவளைப் பகுதியில் உள்ள தமிழர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் கடிதங்களும் உடைக்கப்படுவதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (உ-3)

## பாதுகாப்புச் செயலாளராக ஹமில்டன் நியமனமாவார்

கொழும்பு, மார்ச் 4

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நியமிக்கப்படுவது உறுதியாகிவிட்டதாக ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜெனரல் வனசிங்கா முன்னர் இராணுவத் தளபதியாக இருந்தவர். இப்போது கூட்டுப்படைகள் தளகர்த்தராக இருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா விரைவில் ஆஸ்திரேலியாவில் இலங்கைத் தூதராகப் பதவி ஏற்க இருப்பது தெரிந்ததே.

(உ-எ)

## தலைவரின் கருத்துக்கு தமிழ் எம்.பிக்கள் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 4

தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அதிகாரமுள்ள சமஷ்டி ஆட்சி முறையை அரசு முன்வைத்தால் அதனைப் பரிசீலனை செய்யத் தாம் தயாராக இருப்பதாக தலைவர் பிரபாகரன் அறிவித்ததை கொழும்பில் உள்ள தமிழ் எம்.பிக்கள் வரவேற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் நடக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு திரு. பிரபாகரனின் யோசனை முக்கிய திருப்பமாக அமையும் என்று கூட்டணியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட எம் பி திரு. பி ஜோசப் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர் எல். எவ் இயக்கத்தைச் சேர்ந்த யாழ்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மகாராஷ்டிர முதல்வராக சரத் பவார் நியமனம்

### பிரதமர் ராவ் தந்திர நடவடிக்கை

பம்பாய், மார்ச் 4

மத்திய பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் திரு. சரத் பவாரை மகாராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சராக மீண்டும் நியமித்திருக்கிறார் பிரதமர் பி. வி. நரசிம்மராவ். திரு. பவார் இந்த நியமனத்தை 'ஒழுங்கான படைவீரர்' போன்று ஏற்றுக் கொண்டிருப்பதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் பம்பாயில் ஏற்பட்ட மதக்கலவரத்தைத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பன்ரம், பாமாஸ், பாமாஸ் கறுப்பு, நாட்டுக்கோழிக் குஞ்சுகள் (ஒரு வாரம் நிரம்பியவை) உடன் விற்பனைக்கு உண்டு. பிளான்ட் பரடைஸ், இல. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (24655)

பன்ரம் - கோழிகள், சேவல்கள், முட்டைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கீவி படப்பிடிப்பாளர்கள், இல. 131/1, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம். (24666)

### காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் ஆழங்குழாய் பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 10 மணி தொடக்கம் 2 மணி வரை சந்திக்கலாம். தொடர்புகளுக்கு ப. பாலரஞ்சன், 147/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (24641)

### தேவை

ரியூட்டறி பாவனைக்கு வாங்கு, மேசை உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (சி-4496)

### மணப்பெண்கள் தேவை

சுவிஸ், கனடா, ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க்கில் உள்ள இளைஞர்களுக்கு மணப்பெண்கள் தேவை. ஸ்பொன்சர் செய்து அழைக்கப்படும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24638)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடன் கிடைக்கும். த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [24636]

### சனி மாற்றம்

05 - 03 - 1993 இல் சனி மாற்றம், 14 - 04 - 1993 இல் செவ்வாய் மாற்றம், 01 - 06 - 1993 வரை வியாழ வக்கிரம் எல்லா ராசிகளுக்கும் ஒரே பிரதி ரூபா 8-50. எங்கும் விற்பனையாகின்றது [நூலாசிரியர்: Prof. சத்திய தாஸன் (Mech. E, Elec. E)] பாலாஜி புத்தகசாலை, டஸ் நிலையம், யாழ்ப்பாணம். (58ა6)

**SPOKEN ENGLISH**
**With**
**GRAMMAR**
**by**
**BRITTO**
புதிய பிரிவு
ஆரம்பம்:
**06-03-93**
(8 00 மணி)

**புதிய**
**உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-4493)

## நாடக விழா

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
குருநகர் புனித யாகப்பர் மகளிர் ஒன்றியம்
பெருமையுடன் வழங்கும்
இலக்கிய நாடகங்கள்

★ **இலங்கேஸ்வரன்** ★
(வடமோடி நாட்டுக்கூத்து)

★ **களம் கண்ட காரிகை** ★
(விடுதலை வீராங்கனை புனிதை ஜோன் ஒவ் ஆர்க் சரிதை)

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
காலம்: 06-03 93 சனிக்கிழமை பி. ப. 6-30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிதா பி. எம். இம்மனுவேல்,
பங்குத்தந்தை - குருநகர்.
(சி/4645)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

**O/L**

பிரிவு — 2
SAT & SUN CLASSES
(8-00 — 3-00)

பிரிவு — 3
EVENING CLASSES
(3-15 — 6 00)

பிரிவு — 3
DAY CLASSES
(8-00 — 2-00)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — | திரு. கோபி |
| தமிழ் | — | திரு. திருப்பதி, சிவா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |
| சமயம் | — | திரு. கெங்கா, சங்கர் |

புதிய பிரிவு
ஆரம்பம்:- 06 — 03 — 1993

★ விஞ்ஞான, கணித வகுப்புகள் வாரத்தில் நான்கு மணி நேரம் நடைபெறும்.
(சி-4499)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 17 — 08 — 1975
மறைவு: 26 — 02 — 1993

### சிவபாதசுந்தரம் சிவநீதன்
(சபேஸ்)

சிவபாதசுந்தரம் சிவநீதன் (சபேஸ்) 26 - 2 - 1993 அன்று மன்னாரில் அகாலமரணமடைந்துவிட்டார்.

இவர் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவனும், சிவபாதசுந்தரம் (சுவிஸ்) - இராஜநிதி ஆகியோரின் அன்பு மகனும், ஜசோதரன் (யாழ் மத்திய கல்லூரி), கிரிதரன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குழந்தைவேலு, உமையாத்தை, காலஞ்சென்ற தம்பிராசா, நாகபூசணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராஜதிலகம், இராஜயோகம், (முரசுமோட்டை), சோமேஸ்வரி நந்தினி, செல்வி, சிவஞானசுந்தரம் (கனடா), யோகநாதன் (உருத்திரபுரம்), பத்மநாதன் (உதவி விரிவுரையாளர் — யாழ். பல்கலைக்கழகம்), சத்தியநாதன் (அமெரிக்கா), ஜெயநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், இரத்தினராசா (யாழ். தபாலகம்), இராஜ்குமார் (முரசுமோட்டை), ருக்மணி (யாழ். போதனா வைத்தியசாலை), மனோன்மணி (கனடா), ஜெயந்தினி (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 1 - 3 - 93 அன்று கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன.

அன்புடை நம்பியாக, அறிவுடைத் தம்பியாக, பண்புமிகு நண்பனாக மிளிர்ந்து, இளமொட்டாகவே கருகிவிட்ட சிவநீதனுக்கு எங்கள் இதயம் நெகிழ்ந்த அஞ்சலியை அர்ச்சனையாக்குகிறோம்.

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

496, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (24678)

## ஓராண்டு நினைவஞ்சலி



### ஞா. தேவசகாயம்

மலர்வு: 26 — 05 — 1920
மறைவு: 04 — 03 — 1992

எங்கள் அருமை ஐயாவே! எங்களை ஏங்கவிட்டு எங்கு சென்றீர்கள்! ஆறாது, ஆறாது அழுதாலும் தீராது! மண்ணாகிப் போன நிலை நினைவிலும் மாறாது. ஆசை ஐயாவே!! இன்றோ அன்னை-தங்கை ஓரிடமும், நாம் வேறிடமுமாக இன்னல்களால் துடிக்கின்றோம் நீங்கள் பிரிந்து சென்று ஓராண்டு கடந்து விட்டாலும் தங்கள் நினைவு எங்கள் மனங்களில் அழியாத சித்திரமே!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி (பரிமளம்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரன், பேத்திமார்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வி
### இ. சறோஜினி மங்களிக்கா

மண்ணில்: 14 — 02 — 1978
விண்ணில்: 13 — 03 — 1991

"கிறிஸ்து எனக்கு ஜீவன்; சாவு எனக்கு ஆதாயம்".

என்று சொல்லி, அம்மா சறோஜினி எமைவிட்டு நீங்கி, ஆண்டுகள் இரண்டு சென்றாலும், உங்கள் நினைவுகள் என்றும் எம்மை வாட்டுகின்றன. அன்புடன் எம்மை மகிழ்வித்து விட்டு இன்று எம்மை தவியாய் தவிக்க விட்டு; அகலாத உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல தேவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
அண்ணா, சகோதரிகள்,
பேர்த்தி, மாமாமார், மாமிமார்,
மற்றும் உறவினர்கள்.

B.7, தொடர்மாடி,
குருநகர், யாழ்ப்பாணம். (24661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# இனியாவது புரிய வேண்டும்

தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அமைப்பு முறை முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்ய நாம் தயார். சமஷ்டி ஆட்சி முறை பல வடிவங்களில் உள்ளன. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தன்னாட்சி அதிகாரங்கள் அமையப்பெற்ற ஒரு சமஷ்டி ஆட்சித் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதனை நாம் பரிசீலனை செய்வோம்.

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பி. பி. ஸி. வானொலிக்கு வழங்கிய செவ்வியில் அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, உலகம் முழுவதற்கும் விடுக்கப்பட்ட செய்தியுமாகும்.

தமிழர்கள் தனிநாடு வேண்டும் என்று அடம்பிடிக்கிறார்கள். தமிழீழம் என்ற தனியான தேசம் ஒன்றை உருவாக்கி இலங்கையைக் கூறு போட விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளார்கள். அதனால் தான் பிரச்சினையும், போரும் உருவெடுத்துள்ளன என்று சிங்கள அரசு உலகத்துக்குக் கூறி வருகிறது.

ஸ்ரீலங்கா அரசினது இந்தப் பொய்யை தலைவரின் அறிவிப்பு உலகத்துக்கு அம்பலப் படுத்தி விட்டது. அது மட்டுமன்றி தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டையும் தலைவர் மிகத் தெளிவுபடுத்தி உள்ளார். யதார்த்தமான நிலையை அர்த்தபுஷ்டியுடன் விளங்க வைத்துள்ளார்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், தலைவர் பிரபாகரன் கூறியுள்ள திட்டத்துக்குக் குறைந்த எதனையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் — ஏற்றுக்கொள்ளமுடியாது — ஏற்றுக்கொள்ளவும் கூடாது. தமிழர் தாயகத்தை உள்ளடக்கிய தன்னாட்சி அதிகாரம் உள்ள பூரண சமஷ்டி அமைப்பு முறை ஒன்று மட்டுமே தனித் தமிழீழத்துக்கு இப்போதைக்கு ஒரு மாற்றிடாக முடியும்.

ஒற்றையாட்சி முறையின் கீழ் செயற்படுத்தும் எந்த அதிகாரப் பரவல் திட்டமும், தனித் தேசிய இனமான தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற உதவாது. தமிழர்களின் அரை நூற்றாண்டுகாலப் போராட்டத்துக்கும, பேரிழப்புகளுக்கும் ஓரளவேனும் திருப்திகரமான பயன் கிடைக்க வேண்டுமானால் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அவசியம்

சமஷ்டி என்றால் அசுத்தமான பதம் அல்லது சொல் என்று சிங்களவர்கள் கருதுவதாக ஒரு மாயை உருவாக்கப்பட்டிருக்கிறது. சமஷ்டி தனித்தமிழ் ஈழத்துக்கு முதற்படி என்று சிங்களப் பேரினவாதிகள் 1958ஆம் ஆண்டு தொடக்கம் கூக்குரல் இட்டு வருகிறார்கள். எனவே தலைவர் பிரபாகரனின் இந்த நிலைப்பாட்டை அவர்கள் வரவேற்பார்களா என்பது சந்தேகம் தான்.

ஆனால் தமிழர்களின் இந்தச் சரியான நிலைப்பாட்டை உலகம் புரிந்து கொள்ள வேண்டும் தமிழர்கள் கேட்பது சரியா, நியாயமானதா, சிங்களவர்கள் கூறுவது அல்லது கொடுக்க நினைப்பது நியாயமானதா என்பதை இனிமேலாவது பக்கச் சார்பின்றிப் பகுத்து அறிய வேண்டும்.

நீதியையும் நியாயத்தையும் சிங்களவர்களுக்கும் அவர்களின் அரசுக்கும் எடுத்துக்கூற வேண்டும். அதனை அவர்கள் உணர்ந்து கொள்ளும் விதத்தில் அழுத்தங்களைப் போட வேண்டும அவற்றுக்கும் சிங்கள அரசும், பேரினவாதிகளும் மசியவில்லை என்றால் யுத்தம் ஒன்றுதான் வழியாகும். முடிவில்லா யுத்தமே — இருபக்க அழிவே — தீர்வாகியும் விடலாம்!

## பாடசாலைகளில்

அச்சுவேலி, மார்ச். 4

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் நிதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். [ஓ-11]

o o o

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் பவள விழாவை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை பொருட்காட்சி ஒன்று அங்கு நடைபெறவுள்ளது. (க-154)

o o o

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (க-110)

## தமிழகத்தில் 10 பேர் கைது

சென்னை, மார்ச் 4

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் கடந்த இரண்டு தினங்களில் பத்துப்பேர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களை விடுதலைப் புலிகளுக்காகக் கடத்திச் சென்றனர் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கடத்தல் தங்கம் பிடிபட்டது

கொழும்பு மார்ச் 4

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள வெளிநாட்டு வங்கிக் கிளை ஒன்றின் வெளிநாட்டுச் செலாவணி சருமபீடத்தில் உள்ளூர்வாசி ஒருவர் 70 தங்க பிஸ் கட்டுகளுடன் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து மேற்படி வங்கிக்கிளை அலுவலகத்துக்கு சுங்கப் பகுதியினர் சீல் வைத்தனர்.

51 லட்சம் ரூபா பெறுமதியான 10 கிலோ எடையுள்ள 70 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டன.

இவற்றைக் கடத்தி வந்த நபர் டுபாயில் இருந்து வந்தார் என்று சுங்க வட்டாரங்கள் கூறின. (உ-எ)

## படகு உரிமையாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 4

கிளாலி — பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் நாளை மாலை 4 மணிக்கு கிளாலிப் படகுத் துறைக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## கப்பல் பயணிகளுக்கு

வடபகுதிக்கு வெளியே கப்பலில் செல்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கோண்டாவில் விசாரணைச் செயலகத்திலும், முத்திரைச் சந்தை, சாவகச்சேரி, வதிரி பயண அனுமதி வழங்கும் அலுவலகங்களிலும் பெறுக் கொள்ளலாம்.

கப்பல் பயணிகள் அனைவரையும் இந்த ஒழுங்கினைக் கவனத்தில் கொள்ளும்படி விடுதலைப் புலிகளின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு கேட்டிருக்கிறது. (உ)

## மீனவரைக் காணவில்லை

திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவில் இருந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற ஐந்து பேரைக் காணவில்லை என்று திருமலை மாவட்ட இணைப்பு அதிகாரியிடம் முறையிடப்பட்டுள்ளது. (உ-எ)

### சகடை வீழ்த்தப்பட்ட சம்பவம்:

# பாதுகாப்பு அதிகாரிகள் மீது கடுமையான விமரிசனம்

சீன தயாரிப்பான வை - 8 போர் விமானம் ஒன்று கடந்த ஆண்டு இயக்கச்சிப் பகுதியில் பறந்து கொண்டிருந்த போது விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் பற்றி விசாரணை நடத்திய குழு, சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளை கடுமையாக விமர்சித்துள்ளது.

எனினும், தேசிய பாதுகாப்பு நலன்கள் கருதி, குழு அறிக்கையின் பிரகாரம் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பது புத்திசாலித்தனமாதல்ல என்று சட்டமா அதிபர் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவினால் விமர்சிக்கப்பட்ட அதிகாரிகளில் விமானப்படை அதிகாரிகளும் பாதுகாப்பு அதிகாரிகளும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனாவுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (உ-எ)

### எல்லைப்புறத்தில் உள்ள

# சிங்கள விவசாயிகளுக்கு 1,500 துப்பாக்கிகள்!

கொழும்பு, மார்ச் 4

வடக்கு-கிழக்கு எல்லைப் புறத்தில் உள்ள 25 கிராமங்களைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் விவசாயிகளுக்கு ஆயிரத்து 500 ஷொட்கன்) துப்பாக்கிகளும் 25 ஆயிரம் தோட்டாக்களும் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து தங்களையும் தமது பயிர்களையும் பாதுகாக்கவே அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதாக பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

வடக்கு - கிழக்கு எல்லைப் புறக்கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமல்ல, ஏனைய பகுதி விவசாயிகளுக்கும் இக்காரணங்களுக்காக ஆயுதங்கள் வழங்கப் படும் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆயுதங்கள் பாவிக்கப்படுவதுபற்றி நுணுக்கமாகக் கண்காணிக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-எ)

### ஸ்ரீலங்கா அதிரடிப் படையில்

# 29 பெண் கொமாண்டோ அம்பாறை காட்டில் பயிற்சி!

கொழும்பு, மார்ச் 4

29 பெண் பொலீஸ் கொமாண்டோக்களுக்கு அம்பாறைக் காடுகளில் கெரில்லா போர்முறைப் பயிற்சி அண்மையில் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

போர் முனையில் பெண் பொலீஸ் கொமாண்டோக்கள் அம்பாறையிலேயே முதன் முதலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் —

ஜனாதிபதி பிரேமதாஸா அண்மையில் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த போது காஞ்சன் குடா மற்றும் சாகாமம் ஆகிய இடங்களில் உள்ள விசேட அதிரடிப் படை முகாம்களை இப் பெண் கொமாண்டோக்களே பொறுப்பேற்றிருந்தனர் என்றும் —

அம்முகாம்களில் இருந்த ஆண் பொலீஸ் கொமாண்டோக்கள் காடுகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டிருந்தனர் என்றும் ''சண்டே ஒப்சேர்வர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இப்பெண் கொமாண்டோக்களுக்கு ஹெக்ளர் மற்றும் கொச் எம். பி 5 ரக இயந்திரத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கெரில்லாப் போர் முறைப் பயிற்சியின் போது கிரனேட்டுகள் எறிதல், இரவும், பகலும் மறைந்திருந்து தாக்குதல் நடத்துதல். சுடுவது ஆகியவற்றில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது.

28 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் மத்தியில் இருந்து இந்த 29 பெண் கொமாண்டோக்களும் தெரிவு செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

# பாரதீய ஜனதாவுடன் கூட்டு அ. தி. மு. க. வைக்குமாம்

பாரதீய ஜனதாக் கட்சியுடன் அ. தி. மு க. தேர்தல் உடன்பாடு வைத்துக் கொள்ளும் என்று அ. தி. மு. க. அரசின் நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்

இத்தகைய உடன்பாடு அமைதி தவழும் தமிழகத்தில் மதக்கலவரச் சூழலைத் தோற்றுவிக்கும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலக் கிளை தெரிவித்திருக்கிறது. (உ-எ)

# விறகுச் சிக்கனம் பற்றி விளக்க கருத்தரங்கு

### பாடசாலைகளில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

விறகைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பொருட்டு இரட்டைச் சூட்டடுப்பினை பாவிக்கும் முறை குறித்தும் அதன் பயன்பாடு பற்றியும் பாடசாலைகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன.

அதற்கு முன்னோடியாக யாழ். இந்து மகளிர் கல்லூரி, நல்லூர் சாதனா மகாவித்தியாலயம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, அடைக்கல மாதா கோவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இன்று வியாழக்கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப்பிரிவினர் கருத்தரங்குகளை நடத்த உள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள விறகினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பிரிவினர் உச்சப் பயனைப் பெறக்கூடியதான இரட்டைச் சூட்டடுப்பினை அறிமுகப்படுத்தி உள்ளனர் என்பது தெரிந்ததே. (அ)

## உதயபுரத்தில் மலேரியா

குருநகர், மார்ச் 4

உதயபுரம் குடியேற்றப் பகுதியில் மலேரியா நோய் வேகமாகப் பரவி வருகிறது.

## தலைவரின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட எம். பி. திரு. சுரேஷ் பிரேமச்சந்திரனும் தலைவர் பிரபாகரனின் அறிவிப்பை வரவேற்றார். விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இது உகந்த தருணம் என்றும் அவர் கூறினார்.

தலைவர் பிரபாகரனின் பி. பி ஸி. செவ்வியை ''திவயின'' சிங்கள நாளிதழ் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தது.

எனினும் அரச சார்பில் பிரஸ்தாப அறிவிப்புக் குறித்து நேற்றுவரை கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை.

## கிளாலியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் நீடித்தது.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் பின்வாங்கி முகாமுக்குச் சென்றனர்.

இத்தாக்குதலில் கடற்படை அதிகாரி பலியானதை இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

தாக்குதலின் பின்னர் அதிகாலை முதல் பூநகரி முகாமை அண்டிய பகுதியில் ஷெல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களின் சத்தம் கேட்டது.

நேற்றுக்காலை 5-30 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று பூநகரி முகாமில் தரையிறங்கிச் சென்றது. (உ-எ-5-6-15-'17)

## மகாராஷ்டிர...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மாநில முதலமைச்சராக இருந்த திரு. சுதாக நாயக் பதவி விலகியது தெரிந்ததே. அதனைத் தொடர்ந்து புதிய முதலமைச்சரைத் தெரிவு செய்யும் பொறுப்பை பிரதமரிடம் மாநில இந்திரா காங்கிரஸ் சட்டசபைக் குழு ஒப்படைத்து இருந்தது.

தமக்குப் போட்டியாக பிரதமர் பதவியில் கண் வைத்திருக்கும் சரத்பவாரை, மத்திய அமைச்சர் பதவியில் இருந்து அகற்றுவதற்கு மகாராஷ்டிர மாநிலப் பிரச்சினையை பிரதமர் நரசிம்மராவ் சரிவரப் பயன்படுத்தி இருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

## நாவாந்துறை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

சம்பவம் நடந்த சமயம் இந்தச் சிறுமி தனது உறவினரின் மூன்று வயதுக் குழந்தை ஒன்றை வைத்திருந்ததாகவும்—

ஆனால் அக்குழந்தை தெய்வாதீனமாக காயமின்றித் தப்பிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த இச்சிறுமி பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்றும் தெவிக்கப்பட்டது.

ஹெலி ஒன்று குண்டு வீச்சு நடைபெற்ற இடத்தை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது

இச்சம்பவம் நடந்தபோது அருகில் இருந்த நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை மாணவர்கள் அங்குமிங்குமாக சிதறி ஓடினர்.

### அரியாலையில்

அரியாலைகிழக்கு உதயபுரம் பகுதியிலும் நேற்றுக் காலை 9-15 மணிக்கு விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

குடியிருப்புப் பகுதிகள் மீது வீசப்பட்ட குண்டினால் நான்கு வீடுகள் சேதமடைந்தன

இப்பகுதி மக்கள் பாதுகாப்பான டங்களில் ஒதுங்கிக் கொண்டதால் உடல், உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன [உ-5-15-162]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கணபதிப்பிள்ளை

காரைநகர் கொம்பாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நவாலி வடக்கில் வசித்தவருமாகிய முருகேசு கணபதிப்பிள்ளை காலமாகி விட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஆறுமுகம், வேலுப்பிள்ளை, கனகரத்தினம் (மலேசியா), காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (4-3-93) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சுப்பிரமணியம்
(தமையனார்)
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(24677)

## ஜெயராசா அன்னம்மா

சங்கானையைச் சேர்ந்த அன்னம்மா 03-03-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயராசாவின் அன்பு மனைவியும், கேதீஸ்வரி, (கனடா), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வராசா (கனடா), ஜெகநாதன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், செல்வபவானி, இராஜகுலேந்திரன், பிரபாகரன், தாரணி, சஞ்சிகா, ஜெனித்தா, வினோத், அஜந்தா (யாவரும் கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும், சுகன்யா (கனடா)வின் பீட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (03-03-93) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. கனகரத்தினம்
(மைத்துனர்)
பழைய தபாற் கந்தோர் வீதி,
சங்கானை
(24671]

## தர்மலட்சுமி கந்தையா

72, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளியை வசிப்பிடமாகக்கொண்ட தர்மலட்சுமி கந்தையா (கிளி) காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாக்கியம் கந்தைய தம்பதிகளின் அன்பு மகளும், மகாலிங்கம் (முன்னாள் மஸ்கன்ஸ், இரத்மலானை), புவனேஸ்வரி (பபா - நைஜீரியா) ஆகியோரின் சகோதரியும், பாலேந்திரா (நைஜீரியா), திருமதி என். மகாலிங்கம் (ஆசிரியை, யூனியன் கல்லூரி) (தற்காலிகம், கொழும்புத்துறை துரையப்பா, வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியுமாவார்

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (வியாழன்) காலை 10 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி N. மகாலிங்கம்
[மைத்துனி]
72, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
சுண்டிக்குளி.
[24675]

## திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம்

வட்டு. கிழக்கு முன்னாள் சித்திர ஆசிரியர் நாகேசு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவி புவனேஸ்வரி 03-03-93 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் நாகசுந்தரம் (மலேசியா), காலஞ்சென்ற அருணாசலம் (மலேசியா), கனகரத்தினம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா ஊழியர்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், செல்வராணி, சாவித்திரிதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், தனரத்தினம் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), பூபாலசிங்கம் (பிரபல வர்த்தகர், மாங்குளம்) ஆகியோரின் அருமை மாமியாரும், தில்லைநாதன் (சிரேஷ்ட உதவியாளர், கெமனெக்ஸ் லிமிட்டெட், கொழும்பு) சுரேஷ் (ஆசிரியர், சம்பியா), திருமதி மதிவதனி (ஆசிரியை, பாத்திமா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், கொழும்பு), இரவீந்திரன் (பொறியியல் டிப்ளோமா மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி, இரத்மலானை), சுபாகரன் (மாங்குளம்), சுபாஜினி, கஜனி (மாணவி, தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), கேசினி (மாணவி, வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
கா. தனரத்தினம்
(மருமகன்)
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.
(24676)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இன்று

தென்மராட்சி, மார்ச் 4

வரணி மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (உ-117)

o o o

தென்மராட்சி, மார்ச் 4

எழுதுமட்டுவாழ் வடக்கு அ. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பி ப. 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

# நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிககிழமை பிற்பகல் 2-30 மணிக்கு திரு வீ. ஏ. இராமையா கோஷ்டியினரின் மேளக்கச்சேரி இடம்பெறும். (க)

o o o

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவின் தையல் கைப்பணிப் பொருட்காட்சி ஒன்று, சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முடிவடையும். (க)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 4

சாளரம் வெளியீட்டாளர்களின் ஏற்பாட்டில் நாளை முற்பகல் 11 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் ''பிஞ்சு உள்ளங்களில் மிஞ்சும் உணர்வுகள் கொஞ்சும் பாடல்களே'' என்ற பொருளில் பிரம்மஸ்ரீ. ந. வீரமணி ஐயர் உரையாற்றுவார். (உ)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண — விவேகானந்தா புத்தகக் கண்காட்சி ஒன்று யாழ் இந்துக்கல்லூரியில் நாளை காலை 10 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. அ பஞ்சலிங்கத்தால் திறந்துவைக்கப்படும்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சியில் ஒன்றாக இதை ஒழுங்கு செய்துள்ளது. (க)

o o o

மந்திகை, மார்ச் 4

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் வட்டத்தின் ஆதரவில் உளவியல் கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு பொருளியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். ''இளைஞரின் ஆளுகை வளர்ச்சி'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ உளவியல் விரிவுரையாளர் வண. பிதா டேமியன் கருத்துரை வழங்குவார். (உ-87)

o o o

வல்வெட்டித்துறை, மார்ச் 4

ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (உ-155)

BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH
with
GRAMMAR
By
M. A. ஹரி
B. A., Dip - in - Eng.
ஆரம்பம்: 05-03-1993
வெள்ளி 4-00 p. m.
(இ-4497)

# ஆங்கில ஆசிரியர் தெரிவு: பரீட்சை நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் — ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான — போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இவ் வினாத்தாள்கள் 'குமாரி' கப்பல் மூலம் காங்கேசன்துறையில் இருந்து இன்று காலை பருத்தித்துறைக்கு எடுத்து வரப்படும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

இப்பரீட்சைக்கு தோற்றும் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளை, நாளை காலை 9-30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்துக்குச் சமூகம் தந்து, தமது அடையாளத்தை உறுதி செய்து, தமக்குரிய அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறது. [உ-எ-3]

# மனித உரிமைகள் பணியகம் செயலற்றிருப்பது ஏன்?

## உயர்நீதிமன்றம் கேள்வி

கொழும்பு, மார்ச் 4

மனித உரிமைகள் பணியகம் ஏன் தமக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான அதிகாரங்களைப் பயன்படுத்தாது இருந்து வருகிறது என்று உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருக்கிறது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ. எஸ். டபிள்யு.பி. வடுகொடப்பிட்டிய, பிரியந்த பெரேரா ஆகியோர் தமது முன்னிலையில் விசாரணைக்கு வந்த அடிப்படை மனித உரிமை தொடர்பான மனுக்களை விசாரித்த போது, முன்கண்ட கேள்வியை எழுப்பினார்கள்

மனித உரிமைகள் பணியகத்துக்கு, அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பற்றி ஆலோசனை கூறும்படி சட்டமா அதிபரை உயர்நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் தொடர்பாக மனித உரிமைகள் பணியகத்துக்கு, விரிவான ஒழுங்கு விதிகள் வழங்கப்பட்டுள்ளது. சட்ட விரோதத் தடுப்புக்காவல் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி, தடுப்புக் காவல் கைதிகளை விடுதலை செய்யும்படி உத்தரவிடும் அதிகாரம் மனித உரிமைகள் பணியகத்துக்கு உண்டு.

இது தொடர்பாக பணியகம் விடுக்கும் உத்தரவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிறைவேற்ற மறுக்கும் பட்சத்தில் அது பற்றிமேல் நடவடிக்கை எடுப்பதற்காக அதனை ஜனாதிபதிக்கு அறிவிக்கும் அதிகாரமும் மனித உரிமைள் பணியகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தம்முன் விசாரணைக்கு வந்த அடிப்படை உரிமை வழக்குகள் தொடர்பாக தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்கும் படியும் மனித உரிமைகள் பணியகத்துக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர். (உ-எ)

# காற்றடிக்கும் திசையை பார்த்திருக்கிறார் றொனி

காற்று எந்தப்பக்கம் அடிக்கிறது என்பதைப் பார்த்து தனது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முயற்சியில் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் ஈடுபட்டிருக்கிறார்.

— இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பரபரப்புடன் கொழும்பு திரும்பிய திரு றொனி டிமெல், இன்னும் தான் ஜனாதிபதி பிரேமதாஸாவையோ, திருமதி பண்டாரநாயக்காவையோ, சந்திக்கவில்லை என்று தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கியதேசியக் கட்சியில் சேர்ந்துகொண்ட திரு. டிமெல் பின்னர் மீண்டும் சுதந்திரக்கட்சியில் இணைந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்பலம் இளையபிள்ளை

இளவாலை வடக்கை சேர்ந்த திருமதி பொன்னம்பலம் இளையபிள்ளை நேற்றுக் காலமானார். இவர் பொன்னம்பலத்தின் (பொன்னு) அன்பு மனைவியும், நாகேஸ்வரி (நெசவு ஆசிரியை), இராசம்மா (நோர்வே), இராசேந்திரம் (கிராமசேவை உத்தியோகத்தர்), சின்னத்துரை (விக்கினேஸ்வரன் கிறேசர் உரிமையாளர்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), சிறீகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமத்தம்பி (சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை), இராசேந்திரம் (நோர்வே), லோகேஸ்வரி, இராஜேஸ்வரி, அரியரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நவரூபன், பிருந்தா, ஜெயந்தா, ஜெகரூபன், சோபனா, சகானா, நர்மதா, துவாரகா, அபிராமி, கஸ்தூரி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (04-03-93) வியாழக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் சங்கானை சேர்ச் றோட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. இராசேந்திரம்
(மகன்)
சேர்ச் றோட்,
சங்கானை.
(24679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org